உ

சிவமயம்.

சண்முகநாதன் றுணை.

நாட்டுக்கோட்டை நகரவைசியர் சிறப்பு.

இது

பாண்டியன் பத்திராதிபர்

NO-289

ஸ்ரீமத். ஆ. சத்திவேற்பிள்ளை யவர்களால்

இயற்றி,

தமது

இரங்கோன்.

பாண்டியன் அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

பிரமாதீச ஞூ ஆனி மீ

அறிவிப்பு.

நாட்டுக்கோட்டை நகரவைசியர் சிறப்பு என்னும் இப்பிரபந்தம் பாண்டியன் பத்திரிகையின் அபிவிருத்தியைக் கருதி இயற்றி, பரிதாபி ௵ ஆனி ௴ ௧௬ ௳ ஆதிவாரம் இரங்கூன் ஆறறை மேன்மாடத்து வீற்றருளும் கந்தநாதன் திருச்சந்நிதியில் நகரவைசியர்களும் பல பெரும்புலவர்களுங் கூடிய பேரவையில் அரங்கேற்றப்பட்டது. இப்புத்தகம் நாட்டுக்கோட்டை நகரவைசியர் ஒவ்வொருவரிடத்திலும் ஒவ்வொன்று இருக்க வேண்டியது ஆவசியகமே. பாண்டியன்பத்திரிகையின் அபிவிருத்திக்கு நன்கொடையாக ரூபா ஐந்துக்குக் குறையாமற் கொடுத்துபகரிக்கும் புண்ணிய சீலர்களுக்கே இப்புத்தகம் ஒன்று இனாமாகக் கிடைக்கும். மற்றவர்கள் எவ்விதத்திலும் பெறமுடியாது.

இப்பிரபந்தத்தை நம்மையன்றி மற்றொருவரும் அச்சிடக்கூடாது. மீறி அச்சிடுவரேல், அதனால் நமக்கு ஏற்படும் நஷ்டத்தை, அச்சிட்டவர் கொடுக்கக் கடமைப்பட்டவரென்பதைத் தெரிந்துகொள்ள வேண்டியது.

ஆ. சத்திவேற் பிள்ளை,

பாண்டியன் பத்திராதிபர்.

உ

சிவமயம்.

சண்முகநாதன் றுணை,

நாட்டுக்கோட்டை நகரவைசியர்

சிறப்பு.

விநாயகர் வணக்கம்.

அங்கண்மா ஞால மிக்க வழகுறத் தோன்றி வாழுந்
துங்கமார் நாட்டுக் கோட்டைத் தூயவை சியர்சி றப்பைப்
புங்கவற் றமிழாற் கூறப் புநிதசொற் பொருள்கள் யாவு
மைங்கரன் கமல பாத மளித்தெமை யாளுந் தானே.

வழிபடு கடவுள் வணக்கம்.

திருமுக மொராறுஞ் செய்ய திகழ்கர மீராறும் வெற்றி
பொருமுகந் தோறுங் கொள்ளும் பொருவில்லை வேலும்
ரிருதரு கமலப் போது மிலங்குறச் செந்தின் மேய[போற்பா
வொருதிரு முருக னென்ற வுளத்தவர் துறையு மன்றே.

பாரதி வணக்கம்.

பூமகள் பொலிய வந்த புங்கவை சியர்சீர் கூற
நாமக ளுமைத் தோடு நற்றவர் நாவி னேறிப்
பாமக ளுமங் கொண்ட பாரதி பரிவு கூர்ந்தே
காமக ளாகி யென்னைக் காத்தளித் தாளுந் தானே.

முதலாவது.

தோற்றச் சிறப்பு.

உலகினிற் பிரமன் மேனி'யுறுப்பினின் றுதித்த நான்கு
குலமதிற் றனத னென்னக் குறைவிலா நிதிய மீட்டு
மிலகுவை சியரா யாவு மெய்திவா ணிபஞ்செய் கின்ற
நலமிகு தொழில்கைக் கொண்டோர் நகரவை சியர்க ளாமால். (௧)

வேறு.

ஆதரம்பெருக நிறைந்திடு பொருளா ளளந்திடற் கரும்பெரு நிலையான், மாதிரமறிய வோங்குறும் புகழால் வறப்பினும் வளமிக நல்கி, யோதறம்புரியு மியல்பினான் முருக னுறைதலா லுலகிடை யுயர்ந்த, பூதரம்போலும் பொற்புறு தோற்றப் பொலிவினர் நகர வை சியரே. (௨)

அடுத்தவர்க்கிடுக்கண் செய்திடா தென்று மவரவர் விரும் பிய வெல்லாங்,கொடுத்தளித்தாளுங் கற்பகங் கலியிற் குறைவில் சீர் விண்ணுல கதனை, விடுத்தலைசூழும் பார்மிசை யிந்த மேதகு வைசிய ராகத், தொடுத்தநல்லன்பாற் றோன்றிய தென்றே சொல் லலாந் துணிந்திவர் தமையே. (௩)

வேறு.

அண்டர்பிரான் றிருத்தொண்டே நாடோறு மாற்றி யரிய பெருங் கதியடைந்த வறுபத்து மூன்று, தொண்டர்தமுட் கலிக்க ம்ப ரில்லையெனு மாற்றஞ் சொல்லாத வியற்பகையா ரமர்நீதி மூர் த்தி, வண்டணிபூங் குழற்காரைக் காலம்மை யையவர் வந்துதித்த குலநகர வைசியர்தங் குலமேற், றெண்டிரைசூ ழுலகிலிவர் தோற் றத்தின் பெருமை செப்புவதற் கெளியதோ சீர்தூக்குங் காலே. [௪]

முன்னான சிவசமயம் பொலிவெய்த வறங்கண் முதிர்ந்திடநற் றிருத்தொண்ட ருயர்ந்திடவென் றென்றும், பின்னான பலசமயம் பீடழிய விந்தப் பேருலகிற் றோன்றியுட லாவிபொருண் மூன்று; மென்னாளு மரனடிக்கே யாக்கியறம் புரியு மெழுநகர வைசியர்தந் திருத்தோற்றச் சிறப்பைப், பன்னாளு முரைத்திடினு முடிவடை யா திந்தப் பான்மையறி யாதவரும் பாரினிலுண் டாமோ. [௫]

இரண்டாவது.

கலைச் சிறப்பு.

இம்மைநெறி மறுமைநெறிக் கேற்றபலன் றரத்தக்க
செம்மைநெறிப் பலகலையுஞ் சிறந்திடக்கற் றுலகதனில்
வெம்மைநெறிப் புலஞ்சாரா விருப்பினரா யுறையுமவர்
மும்மைநெறி யும்புரித முடைநகர வைசியரே. (௬)

திங்களின்வெண் கலைபோலத் தேய்ந்துவளர்ந் திடுதலன்றித்
துங்கமுறத் தினந்தோறுந் துலங்கிவளர்ந் திடுகலையார்
புங்கமிகு மிவர்கலையின் பொலிவினைக்கண் டந்தரத்தார்
தங்கடிருக் கண்ணிமையா ததிசயித்தங் கிருப்பாரே. (௭)

வேறு

கலைவலா னென்னுஞ் சேடன் கண்டிவர் கலையை யஞ்சித்
தலைபல கவிழப் பாத லத்தினைச் சார்ந்த டங்கி
யுலைவொடு வருந்தி யின்னு முயிர்ப்படங் காது வாழ்ந்தா
லலைகடற் பாரி லின்னோ ரருங்கலைக் கெதிர்வே றியாரோ. (௮)

மூன்றாவது.

மதிச் சிறப்பு

விண்ணினை விளக்கத் தோன்றி மீமிசை வளர்ந்து தேய்ந்து
கண்ணினை யொளித்துப் போகுங் களங்கமார் மதிபோ லாது
மண்ணினை விளக்கத் தோன்றி வளம்பெற வளர்ந்து நாளு
மெண்ணினைக் கடக்கா நிற்கு மிவர்மதி மதியே யாகும். (௯)

மதிமதி யென்றி யாரும் வணக்கமோ டொடுக்கங் கொண்டு
துதிபல செய்ய வாழுந் துகளில்வை சியரின் செய்ய
மதிதுசை நுனிக்கு மிக்க வடித்திடு கூர்மைத் தென்னூல்
விதியமை யுலகிலிந்த வியன்மதி யுடையார் யாரே. (௰)

இறப்பெதிர் நிகழ்த லென்ன விசைதரு கால மூன்று
முறப்பெறும் விடய மோரு முத்தம மதியி னாலே

யறப்பெருஞ் செல்வி பாகத் தண்ணலைத் தமதுள் ளத்தே
மறப்புறு திருத்தி வாழ்வை சியர்மதி வாய்த்தார் யாரே. (க

வேறு.

வானம்போ லொருமதியே மதியாகக் கொள்ளாம
லூனம்போக் கிடுமதியு முயர்வுதருந் திருமதியுந்
தானங்கள் புரிமதியுந் தனமீட்டும் பெருமதியு
மானமதி பலவுள்ளா ரணிநகர வைசியரே. (கஉ

ஈசர்சிரச் செஞ்சடைக்காட் டிளமதிபோற் பகையுடனே
லூசலென மனமுழல லுறையாதவ் வீசருள
நேசமுடன் றினம்விரும்ப நிலவுதிருத் தொண்டாற்றி
யாசகல வுறைமதியிவ் வழகியவை சியர்மதியே. (கங)

நான்காவது.

குணச் சிறப்பு.

துற்குண மென்றி யாருஞ் சொல்லிடா நிற்குந் தீய
வற்குண முளத்தின் கண்ணே ரணுவள வேனு மின்றி
நற்குண மென்று நல்லோர் நாடொரு முறையா நின்ற
பற்குணந் தங்குளத்தோர் பாரில்வை சியர்க ளாமால். (கச)

அடுத்தவர் சகித்தற் கொவ்வா வதிகமா திங்கு தன்னைத்
தொடுத்துமே புரிந்தா ரேனுந் துளக்கமோ ரணுவு மின்றி
விடுத்திடா தவர்க்கு நாளும் விரும்பின யாவு மன்பாய்க்
கொடுத்துப கரிக்குஞ் சீர்சாற் குணத்தர் வைசியர்க ளன்றே. [கரு]

இங்கிவர் குணத்துக் கொப்பு விசைத்திடத் துருவிப் பார்க்கிற்
றங்கிய புவிமா தன்றிச் சாற்றுதற் கிபாரு மில்லை
மங்கல நாட்டுக் கோட்டை நகரவை சியர் குணங்கள்
புங்கவ ரெந்த நாளும் புகழ்ந்திடற் குரிய தாமே. (கசு)

ஐந்தாவது.

நடைச் சிறப்பு.

பாயமா நிலத்து தித்தோர் பலருங்கண் டுவகை கூறத்
தூயமா நெறியி னுளுந் துகளற நடக்கும் பெற்றி
மேயவர் வணிக ரன்றி மேதினி தன்னி லாயின்
ஞாயமா நெறியின் கண்ணே நடப்பவர் சிலரே யம்மா. (௧௭)

எத்தனை துன்பந் தங்கட் கெய்தினுஞ் சலித்தி டாம
லுத்தம நெறிந டந்தே யுலகினர் தமக்குக்.காட்டுஞ்
சித்தமா சகன்ற நாட்டுக் கோட்டைவை சியர்க டம்மை
யொத்தவ ருலகிற் சில்லோ ரெனத்துணிந் துரைக்க லாமே. [௧௮]

தருமநன் னெறிந டக்குந் தாளினர் தக்கோர் தங்கட்
கருமையி னுதவி செய்யு மறத்துறை நடக்கா நின்ற
வொருமைமா மனத்த ரேற்றோர்க் குபசரித் துதவிக் குன்று
திருமைநன் னெறிக்கு நன்மை யெய்துற நடக்க வல்லார். [௧௯]

இவர்கடம் நடையைக் கண்டே யிந்திரன் முதல வானோர்
கவர்மன முடைய ராகிக் கவலைமா கடலி லாழ்ந்து
தவநெறி தனின டக்குந் தனத்துவை சியர்போ லாது
பவநெறி நடந்தோ மென்றே பார்த்துப்பார்த் தேங்குவாரே. [௨0]

வேறு.

தோணியபல் துறைதோறுந் தொழிலியற்றி யிட்டாதே
வாணிபத்தின் றுறையொன்றே மதித்தபெருந் துறையென்று
பேணியுயி ரினும்போற்றிப் பெரும்பொருளீட் டிப்புவிக்கே
யாணியென வாழ்ந்திடுவோ ரணிநகர வைசியரே. (௨௧)

செல்லுகின்ற வர்த்தகத்தின் செந்நெறியே தன்மனத்தை
யல்லுமுறு பகற்கண்ணு மதிநட்ப மாய்ச்செலுத்தி
யெல்லையில பெருஞ்செல்வ மிவர்போன்றே யீட்டுமவர்
தொல்லையுல கினிலாய்ந்து சொல்லுதற்கு மேலாதே. (௨௨)

வேறு.

உண்மைநன் மார்க்கந் தேறி யுமையவ ளிடப்பா லுற்ற
கண்ணுதல் கமல பாதங் காட்டிடுந் தகுதி வாய்ந்த
வெண்ணுறு சைவ மார்க்க மேயெனக் கடைப்பி டித்தே
பண்ணிடு தவத்தா லுளும் பயில்பவர் வணிகர் தாமே. [உ௩]

இந்திரன் பழியைப் போக்கி யினிதரு ளளித்த சோம
சுந்தரன் றன்னை வேழ முகத்தனைச் சுரரைக் காத்த
கந்தனைக் கயற்கண் ணாளைக் கருத்தினிற் கொண்டு போற்றிச்
சந்தத மொழுக வல்லார் தனத்துவை சியர்க ளாமே. [உ௪]

பூதிசா தனமே யுண்மை பொருந்துமைந் தெழுத்தே யுண்மை
மாதொரு பாகன் சைவ மார்க்கமே யுண்மை யென்று
வேதமோ துவதை யோர்ந்து விளங்குநன் மதியாற் றேர்ந்து
மாதன வணிக ரந்த வழியிலே யொழுக வல்லார். [உ௫]

சகித்திடற் கரிய துன்பஞ் சாரினு மீசன் கோயி
லகத்துறு மன்பி னோடு மடைந்தர னடிகள் போற்றி
மிகத்துறு கருமச் சார்பை யெணிமன நடப்ப தன்றி
வகுத்திடு மற்றை மார்க்க மதனில்லை சிபர்சே ராரே. [உ௬]

ஆறுவது.

செல்வச் சிறப்பு.

மாமேரு விற்பனைக்கு வந்தாலு மேயொருத்தர்
தாமேகொண் டதற்குரியார் தனைப்பார்த்தே யின்னமுமுண்
டாமேல்கொண் டாருமென வறைவணிகர் தனங்கூறப்
போமேயித் தனைத்தென்று பொன்னாட்டுப் புலவோர்க்கும்.[உ௭]

வேறு.

தனதனை யொத்து வாழுந் தக்காற் செல்வ ரான
கனதன வான்க ளியாருங் கடுஞ்செல வுற்ற போது

மனமகிழ்ந் திவர்பா னண்ணி வளர்தரு கடன்கொள் வாரே
னனிமிகு புவியிற் செல்வர் நாடில்யா ராகுந் தானே. [உஅ]

வண்டிமிர் முல்லைத் தண்டார் வணிகர்வர்த் தகத்தா னத்தி
லண்டருங் கண்டு கண்டே யதிசய முளத்திற் கொள்ளப்
பண்டியி லேற்றி நாளும் பலநிதி குவிப்ப ரென்றாற்
றெண்டிரைப் பாரி லின்னோர் செல்வத்துக் கொப்புண் டாமோ .()

விண்ணிடை விளங்கு கோளு நாளுமே விரும்பி வந்து
மண்ணிடைக் குடிபுக் கென்ன மலிநவ மணிகள் யாவு
மெண்ணிடைப் படாத தாக விவர்கடைத் தெருவின் கண்ணே.
நண்ணிடப் பெற்றாற் செல்வ நாமளந் தறியப் போமோ. [௩௰]

மன்னரு மன்னர்க் கெல்லா மன்னருங் கடன்கொள் ளற்கு
வுன்னிடில் வேண்டு மட்டு முறுபொரு ளுதவ வல்லார்
தன்னமுந் தடையில் லாது தனம்பெற வந்தோர்க் கெல்லா
மன்னையி னன்பு கூர்ந்தே யளிப்பவ ரிவரே யன்றோ. (௩௧)

வேறு.

சங்கநிதி பதுமநிதி தானுளவின் றாட்டிலெனப்
புங்கமுள நூலனைத்தும் புகன்றிடநாங் கேட்டதன்றித்
தங்கும்வணி கர்நிதிபோற் றாரணியி லியார்மாட்டும்
பங்கமிலா நிதித்திரளைப் பார்த்துமறி யோநாமே. (௩௨)

சுந்தரப்பொன் னுடதனைச் சுருதிமுறைப் படியாளு
மிந்திர னு மிவர்நிதிகண் டேக்குற்றே யெந்நாளு
மந்தரமென் றேகூற வந்தரத்தோ னுவானேற்
சந்ததமுஞ் செல்வத்தாற் றழைத்தோர்மற் றியாரினியே. (௩௩)

விண்ணுலகிற் குபேரனென மேவுநி திபடைத்த
வண்ணமொரு வன்னன்றி யதற்கதிக முண்டோதான்
மண்ணுலகின் மாநகர வைசியர்க ளென்றுரைக்கு
மெண்ணில்கு பேரரி லங்கிடநாங் கண்டோமே. (௩௪)

சீரோங்கு நவமணியுஞ் செம்பொன்னு மிகக்கொண்டே
பேரோங்க மாடமி யற்றியதில் வாழ்வாரே

ஞரோங்கு நற்குணத்து நன்னகர வைசியர்போற்
பாரோங்கு செல்வம்ப டைத்தவரு முண்டாமோ. [௩௫]

மறநெறியாற் பொருளீட்டி மறனெறிக்கே யீந்துமகிழ்
திறனறியாத் தீயோர்போற் செப்பும்வகை யேற்காதே
யறனெறியாற் பொருளீட்டி யறனெறிக்கே யீந்துமகிழ்
திறனறிந்த வைசியர்சீர் செப்பிமு டிந்திடுமோ. (௩௬)

ஏழாவது.

அணிச் சிறப்பு.

தங்கடிருச் செல்வத்தின் றகுதிக் கேற்பச் சாருநவ மணிய ணிக ளணிந்தா ரேனுந், திங்கணதி முடிசூடுஞ் செய்ய வேணித் தேவனடித் தொண்டரென வுலகோர் தேறப், பங்கமிலாத் திரு ஞானம் பயக்க நின்ற பழவினைகள் வெருண்டோடப் பத்தி யோ டே, மங்கலநற் கண்டியொடு பூதி யென்று மாறுத வணியாக வணி வா ரன்றே. [௩௭]

மிக்கதிரு வளம்படைத்து மறையின் மார்க்கம் விருப்பமொ டு கண்டொழுகி விளங்கு கின்ற, பொக்கமிலா மனமுடைய வணி கர் நாளும் பொன்னணிகள் பூணமறந் திடுத லன்றி, நக்கனுல க டைவிக்கு ஞானந் தன்னை நல்குருத்தி ராக்கமொடு பூதி கொண்டு, தக்கவிதிப் படிபூணக் கணமதேனுந் தன்மனத்தே மறந்திரார் சா ற்றுங் காலே. (௩௮)

பூண்டவர்க்குப் பயமதனைக் கொடுக்கா நின்ற பொற்பணி போ லல்லாது புனைந்து ளார்க்குந், தீண்டினார்க்கும் பவப்பிணி யைப் போக்கி யீசன் றிருவடியைக் கொடுக்கின்ற சிறப்பு வாய்ந்த, காண்டகைய கண்டியுயர் பூதி மேன்மை கண்டுமரு தணிவணிகர் காள கண்ட, ராண்டதொண்ட ரெனவறியப் படுவதன்றி யவனி மிசை மற்றியா ரறையுங் காலே. (௩௯)

எட்டாவது.

முகச் சிறப்பு.

மருக்கமழ் முல்லை மாலை வைசியர் நாளு நாளும்
பெருக்கம தாகச் செய்யும் பீடுவா ணிபத்தி னன்மை
யிருக்கினுந் தீமைவந்தங் கெய்தினு மொரேதன் மைத்தாய்த்
திருக்கிளர் கமலம் போலுஞ் செழுமுகப் பொலிவு குன்றார். (௪௰)

எத்தனை துன்பம் வந்தங் கெய்தினு மினைத லின்றி
யத்தன தடியை யுள்கி யகமகிழ் வோடும் வாழு
முத்தமர் வணிக ரன்றி யுலகினி லாயும் போது
நித்தனு மற்றோர் தம்மை நினைப்பினுங் கண்டி லேமால். [௪௧]

அளவிலாப் பொருள்கள் செய்யு மரும்பெரும் வாணி பத்திற்
களவுடை மனத்தோர் வஞ்ச கத்தினுற் கவர்ந்தா ரேனு
முளமதிற் றுயர மின்றி யொண்முக முதய காலத்
திளங்கதிர் கண்ட லர்ந்தே யிலகுசெங் கமல மாமே. (௪௨)

முனிவரும் போக பூமி முதல்வரும் யாரும் போற்ற
மனமதிற் றூய்மை கொண்ட வைசியர் முகத்தைப் போலத்
தினந்தோறும் வாட்ட மின்றித் திகடரு முகத்தைக் கொண்டார்
கனவினு முலகி லென்றுங் கண்டவ ரில்லை யாமால். (௪௩]

ஒன்பதாவது.

சொற் சிறப்பு.

அறநெறி பிழைத்தி டாம லடுத்தவர்க் கிடுக்க ணின்றி
மறநெறி மார்க்கர் தேய வளர்புகழ் மலிந்து கூட
வுறப்பெறு நன்மை யோங்க வுயர்ந்தவர் பலரும் போற்ற
வறப்பிலா வளங்கண் மல்க வணிகர்சொல் வழங்கு வாரே. [௪௪]

அண்டமே நடுக்குற் றாலு மரசர்த மாணை யாலே
தண்டமே வந்துற் றாலுந் தனத்தினுக் கழிவு நல்கு

மிண்டிய துயர்சேர்ந் தாலும் விரோதங்கள் பலநேர்ந் தாலுங்
கொண்டதோ ருண்மை யன்றிக் குறித்தொரு பொய்கூ றூரே. ()

பொருபெரும் வழக்கி னுலே புந்திமா னூட்ட முற்ற
விருவர்வந் துற்றுத் தங்கட் கெய்திய குறையைக் கூறின்
மருவிய விருவர் கூறும் வழக்கையு மாய்ந்து நோக்கி
யொருவர்பாற் சார்ப தின்றி யுரைப்பவர் வணிகர் தானே. [சசு]

வேறு.

வேதமொழி பொய்த்தாலு மேகமழை பொய்த்தாலு
மோதுமொழி பொய்யாவு யர்வணிக ரைப்போல
மேதினியி லெக்காலு மெய்யுரைத்தே வாழுகின்ற
கோதில்கு ணமுடையார் கொஞ்ச மெனலாமே. [சஎ]

பல்லோர்க்கு மீந்தே பயனடையு மிங்கிவர்நா
வில்லையெனுஞ் சொல்லை யியம்பா தறம்பெருக
நல்லனவே யாய்ந்துரைத்து நாடோறுஞ் சீர்தேடுஞ்
செல்வமிகும் வைசியர்சொற் சிருரைக்கப் போமோதான். [சஅ]

பத்தாவது.

காச் சிறப்பு.

விண்ணுறை தருவோ காம தேனுவோ விரும்பு வோர்கட்
கெண்ணிய வீயுஞ் சிந்தா மணிகொலோ வன்றிச் சங்கப்
புண்ணிய நிதியோ பத்மப் புநிதமா நிதியோ விந்த
மண்ணியல் வணிகர் கையாய் வந்தது கூறுங்காலே. [சகூ]

மாதவர் கரமுஞ் சீர்சான் மறைபயி றாய்மை வாய்ந்த
வேதியர் கரமு மியாவும் விளங்குறக் கற்றுத் தேர்ந்த
வோதுறு புலவர் தங்க ளுயர்கர முங்கீ ழாக
வாதர மொடுமே லாக வமர்கரம் வணிகர்க் காமால். [ருo]

உலகினி லுயர்ந்த வொன்பான் மணிகளை யுறவெ டுத்தே
யிலகுற வுயர்வு தாழ்வின் கின்னதென் ருயு மீந்த
வலகில்சீர் வணிகர் தங்க ளங்கரம்போல மற்றோர்
மலர்கரஞ் செல்வந் தன்னை மருவுறப் பெற்ற தன்றால். [ருக]

காசணி பலகொண் டென்றுங் கருத்தழிந் தேற்ற ருள்ளம்
பேசுறு துன்ப நீங்கப் பெரும்பொரு ளளிப்ப தோடு
வீசன தடித்தொண் டாற்றி யிருவினை துடைக்கப் போற்று
மாசிலா வணிகர் தங்க ளருங்கரங் கரம தாமே. [ருஉ]

ஓயாதே வருவோர்க் கெல்லா முறுகுறை தன்னைத் தேர்ந்து
தாயாரி னன்பு கொண்டு தனம்வழங் கிடுதன் கையா
லீயாத குணத்தைக் காய்ந்த விவர்நக ரத்தா ரென்றே
வாயாரக் கூறி யாரும் வணிகரை வாழ்த்து வாரே. [ருங]

பதினொராவது.

கொடைச் சிறப்பு.

படையினாற் சிறந்து வாழும் பார்பரி வேந்த ரோடு
தடையிலா தேற்றோர்க் கீயுந் தரணியோர் தம்முண் மிக்க
நடையினாற் சிறப்புற் றோங்கு நகரவை சியர்கள் போலக்
கொடையினாற் சிறந்தோ ரிந்தக் குவலயத் தில்லை கண்டாய் [ருச]

வேறு.

அந்நாளிற் கன்னனெனுங் குமுணனெனுந் ததீசியெனு மறையா நின்ற, முன்னுன வள்ளலெல்லாங் கொடுத்தடங்கா வாதரத்தான் முறையே நல்கப், பின்னுளி னகரத்து வைசியராய் வந்துதித்துப் பெருஞ்செல் வத்தா, லெந்நாளுந் திருக்கொடையா லிசையிட்டு கின்றாரென் றியம்ப லாமே. [ருரு]

கற்றவர்க ளறநெறியே கருதியுறைந் திடுபெரியோர் கருணை வாய்ந்த, நற்றவர்க ளரன்கழலே நாடோறு மனத்திருத்தி நயந்து மேனி, முற்றுமொளிர் பூதிசா தனமணிந்த திருத்தொண்டர் முதலா னோரை, யுற்றவர்க ளாக்கொண் டே வேண்டுவன வுவப்பினொடு முதவி வாழ்வார். [ருசா]

தங்கடிருச் செல்வமெலாந் தகுதிபெறு நற்கொடைக்கே சடையின் மீது, திங்கள்புனை தேவளித்தா னெனக்கருதித் தினந் தோறுஞ் சிறந்த தூய, மங்கலமா கியகொடையின் வளம்பெருக்கி

மனமகிழ்ந்து வாழ்கின் றூர்கள், பங்கமிலாப் பெருநிதிசேர் நகரத்
தா ரல்லாது பாரில் யாரே. [௫௭]

ஏற்றவருக் கில்லையென தீந்துவக்குஞ் சிறப்புடையா ரிசை
ந்த மேன்மைத், தோற்றமுடை நகரத்து வைசியர்க ளல்லாது
துருவிப் பார்க்கிற், சாற்றுமுயர் புவியிடத்து வேறியா ரிவர்சீர்த்தி
தக்கோ ராலே, யாற்றல்பெற வெடுத்தோதும் பான்மைத்தே கொ
டைவளமு மளவ தாமே. [௫௮]

ஊருணிநீர் நிறைந்தற்றே யுலகதனிற் பேரறிவோ னுறுஞ்
செல் வம்மென், றோரணிவாக் குடையவொரு புலவன்முன்னு ள
றைந்தமொழி யின்காட் டாகக், காரணிநற் கரமுடைய நகரத்
தார் பெருநிதியைக் கண்டோ மன்றித், தாரணியின் வேறுளார்
தனமதனைக் கண்டதுண்டோ சாற்றுங்காலே. [௫௯]

வேறு.

கொடுத்திடு குணத்தோர்க் கெல்லாங் குறைவிலாச் செல்வ
நாளு, மடுத்திடு மஃதி லார்க்கே யாற்றொணா வறுமை வந்து, தொ
டுத்திடு மென்ற நூலின் றுணிபறிந் திந்து வாழு, மெடுத்தசீர் வ
ணிகர் மேன்மை யிசைத்திடற் கரிதே யார்க்கும். (௬௰)

பன்னிரண்டாவது.

அறச் சிறப்பு.

வேதங்க ளாகமங்கள் விளக்கமுறு சாத்திரங்கள் விரித்தெ
டுத்தே, யோதும்பே ரறங்களெண்ணான் கினையுமுயி ரெனவோம்
பி யுலகின் கண்ணே, நீதங்க ளொடுமுறையு நகரவணி கேந்திரர்
க ளொடுநா ளாக, வேதங்க ளில்லாத பெருவாழ்வாற் சிறப்புற்
றே யிலங்கு வாரால். (௬௧)

ஆகமத்தின் முறைப்படியே யரன்றிருவா லயப்பணிக ளன்
பி னோடு, மாகமுறை நாகர்களும் வளரளகா புரிவேந்து மகிழ்ந்து

நோக்கி, யேகமன தாய்நாமு மிவ்வணிகர் போலியற்ற வியலா
தென்றே, சோகமுற விரசிதம்பொன் மணிமுதல பொருள்கொ
ண்டே துலங்கச் செய்து. (௬௨)

நித்தியமை மித்திகமா பூசைக்கு வேண்டு பொரு ணிறைய
வுள்ளப், பத்தியொடு பரிந்தளித்துப் பசுமடமு நந்தனமும் பதி
ட்டை செய்தே, நத்திசைவாத் தியமுமமைத் தறுகாலப் பூசைதின
நடாத்து கின்ற, வுத்தமர்நாட் டுக்கோட்டை நகரத்தா ரன்றியின்
நூ வுலகில் யாரே, (௬௩)

அண்டர்பிரா னடிபோற்றி யருளெய்தி வீடடைந்த வறுபா
ன் மூன்று, தொண்டர்திரு மடமன்ன சத்திரந்தண் ணீர்ப்பந்தற்
றொகை பாகன், விண்டருள்வே தாகமங்க ளந்தணர்கள் பயில்
சாலை விமல னன்பு, கொண்டதமிழ் மறைப்பாட சாலைபல கல்லூ
ரி குலவக் கண்டே. (௬௪)

சீர்பெறவெங் நாளுநடத் திடுவைசியர் போலாகச் சிறப்புற்
றோங்க, யார்புவியி னடத்தியதி புகழ்பெற்று ராயுங்கா லன்பு
கூர்ந்தே, கார்நிறைந்த கண்டாடித் தொண்டருறை திருமடமுங்
கவினச் செய்தே, பார்நிறைந்த புகழ்பெற்றூர் நகரத்தா ரிவர்சிற
ப்புப் பகரப் போமோ. (௬௫)

வேதியர்க்குத் திருமனைகள் விளக்கமுற வமைத்தளித்து
மேன்மை யான, சிதமுறு நீர்நிலைகள் பலகண்டுஞ் சோலைவளந்
திகழச் செய்து, மேதமுறச் சுமையெடுப்போ ரேகும்வழி சுமை
தாங்கி யியற்றித் தங்கக், கோதில்திருச் சாவடியுங் குறித்தியற்று
வார்நகரக் கோக்கள் தாமே. [௬௬]

எவ்விடத்தி லெத்தரும மியற்றியிருந் தாலுமதை யெண்ணி
யிந்தச், செவ்விபெறு தருமமதைச் செய்தவர்யா ரெனவொருவர்
தெரியக் கேட்கி, லவ்விடத்து ளார்நகர வணிகர்புரி தருமமென்
றே யறையா நிற்பர், பவ்வநீர்ப் புவியிடத்தி லிவர்தருமம் போற்
புரிவார் பார்க்கில் யாரே. (௬௭)

கங்கையணி செஞ்சடிலக் கண்ணுதன்மண் ணுலகதனி
கலிகா லத்தின், மங்கலநற் றருமமெலா மற்றெருவர்க் கில்லாது
மகிழ்ந்து நீரே, தங்கமுற வியற்றியுயர் பேரின்பந் தனையடைந்து
சுகியு மென்று, தங்களுக்குப் பொருளளித்தா ரெனக்குறிக்கு
வணிகர்பெருந் தவந்தா னென்னே. (௫௮

வேறு.

மன்னர்கண் மன்னர் தாமும் வைசியர் போல விந்நா
ளுன்னிநல் லறங்க ளெல்லா முஞற்றுதற் கரிதென் றியம்பு
பன்னிட நாளு நாளும் பலப்பல வறங்கள் செய்யு
நன்னக ரத்தார், தங்க ணற்புகழ் நவிலற் பாற்றோ. (௫௯

வாழி விருத்தம்.

அந்தணர் சுரர்கள் வாழி யாவின முகில்கள் வாழி
சுந்தர வேந்தன் வாழி சுருதிகட் கெட்டா நீல
கந்தரன் கமல பாதங் காட்டியர் சைவம் வாழி
சந்தத நாட்டுக் கோட்டைத் தனத்துவை சியரும் வாழி.

காப்புள்பட ௬௰ திருவிருத்தங்கள் ௭௰.

நாட்டுக்கோட்டை நகரவைசியர் சிறப்பு.

முற்றுப்பெற்றது.